உ

சிவமயம்



அமரர்

# திருமதி. கந்தசாமி வள்ளியாச்சி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## 31ம் நாள் நினைவு மலர்

04.02.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து,

எம்மை அன்போடு பேணி வளர்த்து,

நல்வழிகாட்டி, அறிவூட்டி எம்மை

நன்நிலையில் வைத்து விட்டு

அமரத்துவம் அடைந்த -எம்

அன்புத் தெய்வத்தின் பொற் பாதங்களில்

காணிக்கையாக - இந்

நினைவு மலரினைச் சமர்ப்பிக்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 31ம் நாள் நினைவு மலர்

"குடம்பை தனித்தொழிய புள்பறந்தற்றே உடம்போடு உயிரிடை நட்பு"

மண்ணுலகில்
23 . 05 . 1932

விண்ணுலகில்
05 . 01 . 2015



அமரர்

# திருமதி. கந்தசாமி வள்ளியாச்சி

அவர்களின்

## திதி வெண்பா

ஜய வருட மார்கழி மாதத்தின்
அபர பக்க பிரதமைத் திதிதனில்
அமரத்துவம் கொண்டாள் – எம்
அம்மை வள்ளியாச்சி காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### விநாயகர் துதி

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலரான் நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பி கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

# பஞ்சபுராண தோத்திரப் பாடல்கள்

## தேவாரம்

இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடரினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளுமாறு ஈவதொன்
றெமக்கில்லையேல்
அதுவோ வுனதின் னருள்
ஆவடுதுறை யரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்த தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
தெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொது நடம் போற்றி! போற்றி!!

## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத னாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் அருளிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனோ
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசைந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமாளே.

## வாழ்த்து

வைய நீடுக மாமழை மன்னுக
மெய். விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்நெறி தாந்தழைத் தோங்க
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கந்தசாமி – வள்ளியாச்சிஅவர்களின் நினைவுக் குறிப்பு

இந்து சூழ் ஈழக் கீழ்ப்பால்
எழிற் "திருமலை"யின் கண்ணே,
முந்தையூர் "ஆலங் கேணி"
முது பழங் குடியின் சொத்தாய் -
வந்தவர்; "வள்ளியாச்சி !"
வசந்தமாம் வாழ்க்கைக் காவில்
கந்தரைக் கைப்பிடித்தே
காதலாய் வாழ்ந்த அன்னை !

ஊக்கமும் உழைப்பும் வாழ்வை
உயர்த்திடும் எனவறிந்து,
ஆக்கமும்,மேம்பா டெல்லாம்
அமைந்திட எடுத் தெறிந்து
சோர்விலா விதமாய் நாளும்,
தாம் பணி செய்திருந்தார்
தகைமை சேர் "வள்ளியாச்சி !"

பெற்றதன் மழலை யோரைப்
பிறங்கு மா கல்வியூட்டி
மற்றவர் கண்டு நாளும்
மதித்திட வேண்டு மென்று
கற்றிட அனுப்பி வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமையில் கருத்தாய் நின்று
பெற்றனள் மேலாம் மாண்பு
பெருமை சேர்,"வள்ளியாச்சி !"

ஒன்பது குழந்தை பெற்றும்
அடித்திடா உறுதியோடு
அன்புடன் அரவணைத்து
அனுதினம் பாசத் தொட்டில்,
தன்னிலே போட்டு ஆட்டும்
தன்மையில் மேன்மை பெற்ற–
அன்னையாய் பரிணமித்தாள்;
ஆற்றல் சேர் "வள்ளியாச்சி !"

ஊரிலே திறமை மிக்காள்
உத்தமி ; என்னும் அந்தப்
பேரிலே வாழ்ந்திருந்த
பெருமையை உலகமே பேசும் !
பாரிலே ஈகை உள்ளம்
படைத்தவளாக வாழ்ந்து
மாரி போல் வளம் அளித்து
மறைந்தனள் "வள்ளியாச்சி !"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேற்றப்பா

பிறந்தநாள் அன்றே,பாரைப்
பிரிந்திடும் நினைவு பற்ற
இறந்த நாள் வரையில் சேவை
இயற்றுவோம்,வைய வாழ்வை–
துறந்திடும் காலை வந்தால்
தூய வான் செல்வோம் ! குன்றாகச்
சிறப்புடன் அனைவரோடும்
சேர்ந்துமே மகிழ்ந்திருப்போம் !

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேரூன்றிய அவலங்கள்

## பிள்ளைகளின் அவலம்

அம்மாவே நீங்கள் தெய்வம் எம்மை அரவணைத்த நெஞ்சம் - நீ

சும்மா இருந்ததில்லை எங்களை உன் கண்களாய் கொண்டாயே

பொன் வானில் ஒளிரும் நட்சத்திரம் போல் இப்போ வானிலே நீந்துகின்றாயே –நிலவு தூங்கினாலும்

எம்மைச் சுற்றி உலவி வருவாயே–அம்மா

அப்புவின் பாசை கேட்டதும் நீ ஓடோடி கபாடம் திறக்கச் செல்வாயே

உணக்கு ஒப்பு யாருமேயில்லை இதுவரை நாம் பார்த்துமில்லை

சப்புவாய் விறகுகள் இருந்தாலும் அதை ஊதிப் பத்த வைத்து சமைப்பாயே

எப்பவும் எம்மை விட்டுப் பிரிந்திருக்க மாட்டாயே

பாசியாறு பக்கத்திலே இருந்தாலும் ஒரு நாளும் நீ அதை அளைந்ததில்லை – எமக்குப் போசணை ஊட்ட

மீன் இறாலை விலைக்குத்தான் வாங்குவாயே

பேசிப் பழகும் பண்பெல்லாம் உன்னை உவமை சொல்லுமே பக்கத்தார் நேசிக்கும் அளவிற்கு உவகை கொள்வாயே

அம்மா நீங்கள் தெய்வம் எம்மை அரவணைத்த நெஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்மக்கள் புலம்பல்

என்றும்,எம் நெஞ்சம் தன்னில்

இடம் பிடித்திருக்கும் அன்பு

அன்னையே மண்ணை நீத்து

அரனடி சேர்ந்த தென்ன?

துன்பிலே நாம் கிடந்து

துடிக்கிறோம் ! அம்மா மீண்டும்

மன்பதை தன்னில் நீங்கள்

மறுபடி பிறக்க வேண்டும் !

## அம்மாவை தேடுகின்றோம்

அன்பின் திருவுவமே பாசத்தின் பிறப்பிடமே

நீங்காத துயரினிலே எம்மை நிறுத்தி விட்டு

நீர் இறைவன் திருவடி சென்றனையோ

அணையாத தீபமாய் எம் நெஞ்சில்

சுடர்விட்டெரிந்தாய்

அறிவுதனை ஊட்டிய தாயே

ஆசை முகம் காட்டி மறைந்ததேனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திமதி பல சொல்லி அன்பை ஊட்டினீரே
பதறுகிறோம் நாம் இங்கு தினப் பொழுதும்

நினைக்கும் போது நெஞ்சு துடிக்கிறதே அம்மா
நினைவுகள் முன்னாலே நிழலாடுகின்றதே தாயே
நோயினாலே துடிதுடித்த போதெல்லாம்
கண்களால் எமைப் பார்த்து செய்தி பல சொன்னீரே

தேடுகிறோம் உம் உறவை
திரும்பிவர முடியாத இடம் தேடினீரே
தேம்பித் தேம்பி அழுகின்றோம்
ஆசை முகம் காணும் நாளுக்காய்
மண்டியிட்டே காத்திருப்போம்
ஆத்மா சாந்தி பெற நாள் தோறும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

பிரிவால் வாடும்
அன்பு மகள்
தேவிகா ஆறுமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைகக்குட்டி சேகர் புலம்பல்

உயிர்க்குயிராய் எந்தனையே
உபசரித்த அன்னை !
உயிருள்ள வரையிலுமே
மறப்பேனா உன்னை ?

உயிரே நீ கல்வி தந்து
உயர்வளித்தாய், என்னை
உலகத்தார் மதிக்கின்ற
வழி சமைத்தாய்,அன்னை !

கண் போல எனை மதித்துக்
காத்தவள் நீ ! இந்த–
மண் மீது மறு பிறப்பிலு
மகனாக்கிக் கொள்வாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதர்களின் அவலங்கள்

எல்லோர்க்கும் நல்லாளாகி,
எம்மூரில் வாழ்த்தீர் ! இன்றும்
சொல்லாமல் போன தொன்றே
சோகத்தை அள்ளிக் கொட்டும் !
நில்லாது நிலையில்லாத
நிலமெனும் வாழ்வில்,உன்போல்
நல்லவள் மீண்டும் மீண்டும்
நலம் செய்யப் பிறக்கவேண்டும் !
ஒன்றாய்ப் பிறந்தோம் ஒன்றுபட்டு வாழ்ந்தோம் - எம்மை
மன்றத்தில் அமர்த்தி மரியாதையும் தந்தாயே
பெண்ணாய்ப் பிறந்தவள் என்ற பெருமையும் கொண்டாயே - இதில்
நன்றாகவே வாழ்ந்து இவ் வாழ்வு தனில்
இனிமையுடன் புகுந்தாயே

## மருமக்கள் புலம்பல்

மக்களைப் பார்த்ததே போல்
மருமக்கள் எமையும் பார்த்த
மிக்க சீர் மாமியாரே
மேன்மையாய் வாழ்வமைத்து,
தக்கவா றெங்கும் உங்கள்
தகைமையை உரைத்து நாமும்
எக்காலும் வாழ்ந்த்திருப்போம்
எங்கினி உமை நாம் காண்போம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரப்பிள்ளைகள் புலம்பல்

அம்மம்மா அப்பம்மாவாய்

அருகினில் மகிழ்ச்சிதந்தீர் !

இம்மண்ணில் உம்மை மீண்டும்

எங்குதான் காண்போம் ! எங்கள் -

கண்கள் தான் கலங்கா வண்ணம்

கனிவுடன் பணிகள் செய்தீர் !

எண்ணுவோம் உங்கள் தூய

எண்ணமே நெஞ்சில் வாழும் !

காசினியில் நீங்கள் பிறந்தது எம்மை நேசிக்கவேஅம்மம்மா–எம்மை

பெற்றெடுத்தவர்களை விட உம்மை பூசித்தோம் அம்மம்மா

யோசித்துத் திரியும் போதெல்லாம் எம்மை விருப்போடு அணைப்பீர்களே

ஒன்றும் காட்டிக் கொள்ளாமல் முகத்தை வைப்பீர்களே

பாசத்தில் எமக்களித்த மழலைச் சொற்கலெல்லாம் - இந்த

சீலத்தில் என்றென்றும் தென்றலாய் வீச வைப்போம்

அம்மம்மா உம்மை எமக்கு மறக்க முடியாது – எந்நாளும்

உண்மையாக உங்கள் ஆத்மா எம்மோடு என்றுமே ஒட்டியிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை முகம் காணத் துடிக்கின்றோம்

மண்ணுலக வாழ்வினை முடித்து
விண்ணுலகம் சென்றடைந்த
எங்கள் அம்மம்மாவே பாட்டியே
ஆறாத் துயரம் இன்னும் தீரவில்லை

யார் இனி உங்களைப் போல்
எம்மை அன்பில் அரவனைப்பார்
யார் இனி அறு சுவை உணவை தருவார்
யார் எம்மோடு பாசமாய் வார்த்தை பேசிட வருவார்

மென்மையான உள்ளம் கொண்டு
உண்மையான அன்பு தந்த தெய்வமே
உங்களை இழந்து தவிக்கின்றோம்
சிந்துகின்ற கண்ணீரும் தீரவில்லை

இம்மையின் எல்லையினைக் கடந்து
மறுமையின் வாழ்வைத் தொடர்ந்த
உங்கள் முகம் காணத்துடிக்கின்றோம்
மீண்டும் வாருங்கள் எங்களுடன் உறவாட

அன்புடன்
பேரப்பிள்ளைகள்
செபிஸ்ணன்
செஜினா
செனுஜா
ஹரிஸ்வர்
நிதுஸ்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறாமகன்,மகள்மார்களின் அவலங்கள்

பெற்றவர் தனித்துவம் மேலாய்

பெறாமலே பார்த்திருந்தீர் !

பற்றோடும் பாசத் தோடும்

பணி பல நிதம் புரிந்தீர் !

மற்றவர் மதிக்கும் வண்ணம்

மதியினைத் துலக்கி வைத்தீர் !

இற்றை நாள் வரையும் செய்த

இன்பணி பகரலாமோ ?

நாம் வேறோருக்குப் பிறந்தாலும் எப்போதும் - எம்மைப்

பிரித்துப் பார்த்திருக்க மாட்டீர்களே அம்மா

சோம்பல் படாதீர்கள் என்றுரைக்கும் உங்கள் வார்த்தை–எங்களை

கொம்பறி மூக்கர்களாய் ஆக்கி விடுவீர்களே

சாம்பல் தரும் கொள்ளிகளை சேர்த்து தருவீர்களே,அதை

பறி கட்டி பாதுகாப்பாக மழையிலே நனையாமல் வைப்பீர்களே

மொக்காட்டுச் சாமியை வணங்கி வந்த உங்களை - இப்போ

மேகக்கூட்டத்தில் தேட வைத்து சென்றுவிட்டீர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றார் உறவினர் அவலம்

துன்பம் துயரிலெல்லாம்

துணைநிற்கும் 'வள்ளி'யுந்தன்

அன்புக்கு நிகர் இந்த

அகிலத்தில் ஏதும் இல்லை !

பண்பின் இலக்கணமாய்

பரிவுடனே,பாசத்தைக்

கண்போல் மதித்தவளே

கலங்குகிறோம் உனை நினைத்தே !

கந்தனின் கள்ளி வள்ளி என நாமுனை பறைவோமே—நீ

உந்தன் கூந்தலிலுள்ள பேன்களை எடுக்க அழைப்பாயே

வேந்தனின் செல்வி எனவும் ஊருனை சொன்னதே - இருந்தும்

பாதகர் உன்னை தன் பக்கம் இழுத்து சென்று விட்டார்களே

இரவு, இருட்டு உன் வாழ்வில் அறிந்திருக்க மாட்டாயே விடியும்

பொழுதைக்கூட உன்னோடு சேர்த்துக் கொள்வாயே

வரவு பெருக்கு என்று வாழ்ந்த உம் வாழ்க்கை—என்றும்

எமக்கு உதாரணம் சொல்லுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபந்தம் 1

1. **இறந்தவருக்குக் கிரியை செய்வதன் அர்த்தமென்ன?**

இறந்தவர் மேலும் அவருக்கு வாழ்வுண்டு என்பதே அர்த்தமாகும்

2. **இறந்த பின் அவருக்கு ஏன் வாழ்வு? எப்படி வாழ்வது?**

அவருக்குக் சுவர்க்கத்திலும், நரகத்திலும் வாழ்வுண்டு திரும்பவும் அவர் பூமியில் பிறந்து முன் வாழ்ந்ததுபோல் வாழும் வாழ்வுமுண்டு. சுவர்க்க வாழ்வு இன்பானுபவம் நரக வாழ்வு துன்பானுபவம். திரும்ப வரும் பூமி வாழ்வு இன்ப துன்ப கலப்பான அநுபவம்

3. **இறந்த பின்பு அவர் இங்கில்லை. அந்நிலையில் அவருக்குச் செய்வதை அவர் பெறுவதெப்படி?**

இறந்த பின்பும் குறைந்தது முப்பத்தொரு நாள் வரை அதாவது அந்தியேட்டி வரை அவர் இங்கேதான் இருக்கிறார். அதாவது தான் விட்ட உடலின் தொடர்பு நீங்காமல் அருவமாய் இருந்து கொண்டிருக்கின்றார். அந்நிலையில் உடலைத் தொடர்பு படுத்திச் செய்யுங் கிரியைகளின் பலனை அவர் நேரடியாகவே பெறுகிறார். அந்தியேட்டியின் பிறகு நிகழுங் கிரியைகளின் பலனை மேலுலகத்திலுள்ள பிதிரர்கள் என்ற தேவசாதியார் ஏற்று அவர்கள் எங்கிருந்தாலும் அங்காங்கு சேரச் செய்கிறார்கள்.

4. **இக்கிரியைகளை அபரக் கிரியை என்பதேன்?**

அவை இறந்த பின் செய்யப்படும் கிரியைகள் என்பதால்தான் அபரம் என்றால் பின்.

5. **அபரக்கிரியைகள் எவையெவை?**

பிரதேக்கிரியை, சாம்பலள்ளுதல், அந்தியேட்டி, மாசிமகம், ஆட்டைத்திதி, திவசம் என்பனவாம்.

6. **அபரக்கிரியைகள் உடலுக்காகவோ உயிருக்காகவோ?**

உயிருக்காகவேதான் ஆனால் அந்தியேட்டி வரை உடல் தொடர்பில் வைத்தும் பிறகு தனியாகவும் உயிரைக் கருதிச் செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. **இக்கிரியைகளினால் உயிருக்கு நன்மை விளைவது எங்ஙனம்?**

இக்கிரியைகளால் உயிருக்கு இரு விதத்தில் நன்மை விளையும் தனது சரீரத்தை விட்டு கிளம்பிள உயிர் அதன் மேல் பெற வேண்டிய அநுபவங்களுக்கு உபகரிப்பது ஒன்று படிப்படியாக அவ்வுயிர் சிவத்தன்மை பெறுவது ஒன்று.

8. **சிவத்தன்மை பெறுவதென்பது எங்ஙனம்?**

அபரக்கிரியைகளைச் செய்வதனால் உயிரின் பாவங்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன அதற்குத்தக்க அளவு உயிரைப் பற்றியுள்ள மல பந்தம் விலகிக் கொடுக்கும் மலம் விலகுமலவிற்குச் சிவத்தன்மை சிறிது சிறிதாகப் பற்றும் கால அடைவில் சரியான பக்குவம் வாய்க்கும் போது முழுமையாக அது சிவத்தன்மை பெற்று விடும்.

9. **நினைவஞ்சலிகளில் அவர் சிவபதம் அடைந்தார் என்றுதானே எல்லோரையும் குறிக்கிறார்கள் அப்படியானால் கிரியைக்கு என்ன அவசியம்?**

அப்படிக் குறிப்பது ஒவ்வொருவரும் சிவபதமடைய வேண்டும் என்ற நல்விருப்பத்தினால். இப்படி நல்விருப்பத்தினால் உரைப்பது உபசாரம் என்ற அளவில் வைத்துக் கொண்டு உரிய கிரியைகளை முறைப்படி செய்ய வேண்டும்.

10. **பிரேதக் கிரியையில் கும்பபூஜை அக்கினி காரியம் எல்லாம் செய்வதேன்?**

அவையெல்லாம் முன் சொல்லியவாறு இறந்தவரைச் சிவமாக்கும் முயற்சிகள் தான். கும்பங்களில் உருத்திரனையும் திக்கு பாலகர்களையும் எழுந்தருள வைத்துப் பூசிக்கப்படுகின்றது. கும்பங்களை பூசிப்பதனால் அவற்றிலுள்ள நீருக்குச் சிவத்தன்மை உண்டாகும். அந்நீரினால் இறந்த உடலுக்கு நீராட்டுதலால்நீரிலுள்ள சிவத்தன்மை உடலிற் செறியும். அக்கினி சிவமாக பூசிக்கப்படுவதால் அதில் ஏற்பட்ட சிவத்தன்மை அந்த அக்கினியினால் உடலை எரிக்கும் போது அதன் சிவத்தன்மை மேலும் அதிகரிக்க உதவும். உடலை விட்டு பிரிந்தாலும் ஒருவகையில் அதன் தொடர்பு நீங்காதிருக்கும் உயிருக்கும் அச்சிவத்தன்மை பதியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. **உடலை விட்டு பிரிந்த பின்னும் உயிர் உடல் தொடர்பு நீங்காதிருக்கிறதென்பதை விளக்க முடியவில்லையே! அதை எப்படி நம்ப முடியும்?**

அப்படி அது தொடர்பு நீங்காதிருப்பதை காட்சியாற்காண முடியாது காணும் பக்குவம் சாதாரணமான எங்களுக்கில்லை பக்குவமுள்ளவர்கள் கண்டு சொல்லியுள்ளார்கள். [illegible]கள் சொல்வதை நாம் அநுமானித்து நம்புவதற்குரிய ஏதுக்கள் நடமுறையில் இருக்கின்றன. இறந்தவர்கள் உயிர்விடும் போது கிடந்த இடத்தில் அன்று தொடக்கம் இளநீர் அல்லது தண்ணீர்ச் செம்பு வைப்பதுண்டு எட்டு என்ற வைபவத்திலன்று அவர் விரும்பி அருந்தி வந்த சகல உணவுப் பண்டங்களையும் படைப்பதுண்டு அங்கே பால் படைப்புக்கள் முடிந்த பின் படைத்தவற்றிற் சிறிது சிறிது எடுத்து முகட்டை நோக்கி காட்டுவதுண்டு. இவை யெல்லாம் இறந்தவர் தனது உடம்பு எரிந்தபின்னுங்கூட உடல் இருந்த சூழலில் இருக்கிறார் என்பதை அறிவிக்கும் ஏதுக்களாகும்.

12. **அங்ஙனமாயின் அவர் சுவர்க்க நரகம் போவாரென்றல்லவோ முதலிற் சொல்லப்பட்டது**

அதற்கு இது மாறுபடாது எங்ஙனமெனில் இப்போ சொல்லப்படுகிற இந்தத் தொடர்பு முற்றாக நீக்கப்பட்டதன் மேல்தான் அவர் சுவர்க்க நரகங்களிற் செல்வர் அந்தியேட்டியில்தான் அத்தொடர்பு முற்றாக நீக்கப்படும்.

13. **அந்தியேட்டியில் அது நீக்கப்படும் என்பது எப்படி?**

அந்தியேட்டிக் கிரியையை அவதானிப்பதால் அது புலனாகும். அந்தியேட்டிக் கிரியைக்கு அமைக்கும் மாக்கோடிட்ட மண்டபத்தில் தென்கிழக்கு மூலையில் ஐந்து நிற மாக்கள் சதுரவடிவாகப் பரப்பப்பட்டிருக்குமே அதில் ஒவ்வொரு நிறமும் பஞ்ச பூதங்களில் ஒவ்வொன்றைக் குறிக்கும் பஞ்ச பூதங்களால் அமைந்தது அவர் உடம்பு பஞ்ச பூதங்கள் மூலமாகத்தான் அவர் உடம்பில் தொடர்புற்றிருந்தார் என்ற உண்மையின் அடிப்படையில் மாவடிவான சதுரங்களில் பஞ்ச பூதங்களைப் பொருத்தி அவ்வப் பூதங்களுக்குரிய தெய்வங்களைப் பூசித்து அவற்றின் கருணையால் அவருக்கு அப்பூதங்களோடு இருந்த தொடர்புகளை நீக்கிவிடுவது அக்கிரியையின் விளக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14. அந்தியேட்டியிலும் தரப்பையில் ஆளுருவஞ் செய்து குளிப்பாட்டிப், பொற்சுண்ண மிடித்துச் சுடுகிறார்களே அது ஏன்?**

அதுவும் அந்தியேட்டிவரை உயிருக்கு உடல் தொடர்பு இருக்கிறதென்பதற்கான மற்றொரு அறிகுறிதான்

**15. சிலருக்கு மட்டும் பிரேதக் கிரியையோடு அந்தியேட்டியும் செய்கிறார்கள் அது ஏன்?**

அதையும் அறியத்தான் வேண்டும் சாதாரணமாக நம்மவரைப் போல்லாது சிலர் விஷேமான தீட்சை, ஆசாரம், ஒழுக்கம், சாதனை, சிவபூசை ஒழுங்கு உள்ளவர்களாய் இருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு விசேட பக்குவம் இருக்கிறது. அந்த வாய்ப்பினால் அவர்கள் இறந்த உடனேயே தேகத் தொடர்பை நீக்கி விடக்கூடிய தகுதியும் இருக்கிறது. அதனாலேதான் அப்படி நிகழ்கிறது.

**16. அ:.திருக்க பிரதேசக் கிரியையிலும் அந்தியேட்டியிலும் பொற்சுண்ணமிடிக்கிறார் களே அது எதற்காக?**

அதுவும் அவர் உடல் தொடர்புள்ளவராயிருத்தலிற் சம்பந்தப்பட்டது. அவருடைய தநு. கரணம், புவனம், போகம் எல்லாவற்றையும் இடித்து நொறுக்கி இல்லாமற் செய்தல் என்ற கருத்தில்தான் செய்யப்படுகின்றது.

**17. பொற்சுண்ணமிடிக்கையில் திருவாசகத்தில் இருக்கும் திருப்பொற்சுண்ணப் பதிகமும் படிக்கிறார்களே! அது ஏன்?**

பொற்சுண்ணமிடித்தலினால் இறந்தவருடைய தேகத்தொடர்பு நீக்கப்பட்ட அவர் சிவ லோகஞ் சேரத் தகுதியாகிறார். அப்படி அவர் சிவலோகஞ் சேரும்பட்டசத்தில் அவருக்கு அங்கு வரவேற்பு நிகழும். அந்நிகழ்ச்சியைப் பிரதிபலிக்கும் ஓசைப் பொலிவும் பொருள் விளக்கமும் திருப்பொற்சுண்ணப் பதிகம் பாடல்களில் உண்டு அதனாலேயே பொற்சுண்ணமிடிக்கும் நிகழ்ச்சியோடு இதுவும் தொடர்பு பட்டிருக்கின்றது. உண்மையில் சிவலோகஞ் சேருந்தகுதியுள்ளவர் விஷயத்தில் அது உண்மையாய் முடியும். மற்றவர் விஷயத்தில் அபசாரமாகும். என்றாலும் பரவாயி லை. ஏனெனில் இவர்களும் எப்போவெனினும் தமக்குரிய காலத்திற் சிவலோக மடைய வேண்டியவர்களே, அது நியதியமான உண்மை. நியதியமான உண்மையை உபசாரமாக் கொள்ளுதல் பழுதில்லை அது திருத் தத்திற்குச் சிறந்த வழி என்பது சைவ விளக்கநிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அந்தியேட்டி முடிவில் வீட்டுக்கிரியை செய்வதேன்?

அந்தியேட்டி முடிவில் இறந்தவரது வீட்டில் அன்னதானம், ஏகோதிட்டம், தசதானம், **சபிண்டீகரணம்** முதிய பல கிரியைகள் நிகழும். இவையெல்லாம் பொதுவில் வீட்டுக் கிரியைகைள் எனப்படும். அந்தியேட்டியில் தேகத்தொடர்பு நீக்கப் பெற்றவர் தனக் குரிய சுவர்க்க, நகர கதிகளிற் செல்வார் அவ்வாறு செல்லும் அவர் பாதை தனிமை யானது. இருளானது விக்கினங்களோடு கூடியது. அதலால் அவ்வித கஷ்டங்களில் இருந்து அவருக்கு விமோசனமளிக்கும் நோக்கில் வீட்டுக் கிரியைகள் நிகழ்கின்றன. கிரியைகளில் குடை, செருப்பு, விளக்கு, செம்பு, தண்ணீர் முதலிய எல்லாம் கொடுப்பது அவ்வசதிகள் வேண்டியிருக்கும் பாதையில் அவை அவருக்கு உதவட்டும் என்பதனாலே தான்.

19. வீட்டுக்கிரியை அழைப்பிதழிற் சிலர் சபிண்டிக் கிரியை என்று மட்டுங் குறிக்கிறார் கள் அது ஏன்,

அது வேறொரு விசேசத்தினாலுமல்ல, வீட்டுக்கிரியையின் பகுதிகள் என மேற் சொன்னவற்றிற் சபிண்டீகரணம் பிரதானமானது என்பதால்தான் எங்ஙனமெனில் இறந்தவர் மேற்குறித்த கஷ்ட வழியெல்லாந் தாண்டிப் போய்த்தன் சுவர்க்க நரகப் பேறுகளைகளைப் பெறுவதற்கு முன்சொன்ன பிதிரர்களோடு சேர்க்கப்பட வேண்டும். பிதிரர்களுக்கு அறிகுறியாக, மாவுடன் எள், அரிசி, தேன் சர்க்கரை, தயிர் குழைத்து உருட்டிய பிண்டங்களையிட்டு வைத்து அவற்றுக்கெதிர் இறந்தவர்களுக்கு அறிகுறியாக ஒரு பிண்டமிட்டுக், கிரியை செய்பவர் எல்லோரையும் ஒருசேரப் பூசித்து எல்லோருக்கும் நைவேத்தியம் கதபல தாம்பூலம் எல்லாம் சமர்ப்பித்துத் தூப தீபாரதனை செய்து முடிவில் இறந்தவரைக் குறிக்கும் பிண்டத்தை மற்றப் பிண்டங்களோடு ஒன்று சேர்த்தல் காரணமாக இது சபிண்டீகரணம் எனப்பெயர் பெற்றது.

20. அவ்வாறு பிண்டத்தாற் குறிக்கப்படும் பிதிரர் என்பார் யார்? அவர்களுக்கும் இறந்தவர்களுக்கும் உள்ள தொடர்பு யாது

பிதிரர் என்பார் படைப்புக் காலத்திற் சிவனால் படைக்கப்பட்ட ஒரு தேவசாதியார் இறந்தவர் நலன்களைக் கவனிக்கும் அலுவலர்களைாகச் சிவனால் நியமிக்கப்பட்ட வர்கள் அவர்கள். இறந்தவர் ஒரு ஆண் ஆனால் அவரது பிதாமகர் (பேரன்) பிரபிதா மகர் (பூட்டன்) என்றதற்குப் பொருந்தும் நிலைளில் அவர்கள் இருப்பர் இறந்தவர் பெண்ணானால் அவரின் மாதா, மாதாமஹீ (பேர்த்தி), பிரமாதாமஹீ என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைக்குப் பொருந்தும் நிலைகளில் இருப்பார்கள். அதாவது இறந்தவரின் பேரில் அவரது தகப்பன், தாய், பேரன், பேர்த்தி, பூட்டன், பூட்டி என்போர்க்கிருக்கும் கரிச னைக்குச் சமானமான கரிசனையுள்ளவர்களாக அவர்கள் இருப்பார்கள். இறந்தவர் பேரில் அவர்களைக் குறித்துச் செய்யப்படும் எள்ளுத் தண்ணீருமிறைதற் (திலதர்ப் பணம்) கிரியையால் அவர்கள் திருப்தியுற்று இவரைக் குறித்துச் செய்யும் தானதருமப் பலன்களை அவர்கள் ஏற்று அவற்றின் மூலம் அவருக்கு நன்மை விளைவிப்பார்கள். அதேவேளை கிரியை செய்பவர் மேல் அவர் தந்தை, தாய் முதலியோர் சொரியும் அன்பையும் ஆசியையும் இவர்கள் பெறவும் வகை செய்வார்கள் அதனாலேதான் பிதிர்க்கடன் பிரதானகடன் எனப்படுகிறது.

**21. இப்படியான பரிவர்த்தனைகள் (கொடுக்கல் வாங்கல்) உண்மையென நம்பலாமா? இவற்றுக்கான தொடர்பு சாதனங்கள் எங்கே?**

ஏன் நம்பக்கூடாது? சந்திர மண்டலத்துக்கு ஏதும் அனுப்பினால் போய்ச்சேரும் என்று இப்போ சில வருடங்களுக்கு முன் யாருமே நம்பியதில்லை. இப்போ நம்புகிறார்கள். உண்மையில் பூமிக்கும் சந்திரனுக்குமிடையில் மெயில்வண்டியோ, தந்திக்கம்பியோ ஒரு சாதனமுமில்லை. ஆனால் அனுப்பும் பொருள் போய்ச்சேர விஞ்ஞானத்தில் தொடர்பு சாதனம் இருக்கிறது. இச்சாதனத்தை மனிதன் இப்போதான் கண்டறிந்தான் என்பதேயன்றி இதற்குமுன் அதற்குவழி இருந்ததில்லை என்பதற்கில்லை. அந்த அமைப்பை ஏற்படுத்தி வைத்த சிவன் மேற்குறித்த பிதிர்களுக்கும், பூமியிலுள்ளோர்க் கும் இடையில் அப்படியொரு தொடர்புக்கான சாதனங்களை அமைத்து வைத்திருக்க மாட்டார் என்பதற்கு ஆதாரமில்லை. ஆனால் கடவுள் சம்பந்தப்பட்ட தொடர்புச் சாதனங்கள் அருவமாயிருந்தே தொழில் செய்யும் மனிதன் சம்பந்தப்பட்டவை தான் உருவ அமைப்பு வாய்கும் அதற்கு அப்பாலான பிதிர்லோகம் முதலியவற்றுக்கு அது வாய்க்காது. தத்துவ இயல்பின்படி அது என்றும் அருவமாயிருக்கும். அதனால் நம்பலாம்.

**22. இப்பரிவர்த்தனையில் புரோகிதராய் இருப்பவரின் பங்கு யாது?**

கிரியை செய்பவருக்கும் இறந்தவரக்கும் தொடர்பூட்ட அதிகாரி போலப் பிதிரர் இருப்பர். அது போலக் கிரியை செய்பவருக்கும் பிதிரர்க்கும் இடையில் தொடர்பூட்ட திகாரியாக இருப்பவர் புரோகிதர் புரோகிதராவார் நல்லறிவொழுக்கம், அக்கினி, காரியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூசை நெறிகளும் உடையவராயிருந்தால அவரிடத்தில் பிதிர்கள் திருப்தியடைவார் கள். அத்தொடர்பில் இவர் ஏற்கும் தானம் முதலியவை பல பிதிர்களையடையும். அதற்குபரிகாரமாக இவர் தானங்களை ஏற்கும்போது "இதம் சிவாய நம" இது சிவனுக்கு எனக்கல்ல என் சொல்லி ஏற்க வேண்டிய விதியுண்டு. தானம் சற் பாத் திரமானவர்கள் கையில் கொடுக்கப்பட்டால் சிப்பியின் வாயில் விழுந்த நீர் முத்தாய் விளைவது போலப் பெரும்பயனாய் விளையும். அந்நிலையில்லாதபோது கமரிலூற் றிய பால்போலாகும். (கமர்நிலப்பிளவு)

## 23. சிரார்த்தம் என்பது யாது?

அந்தியேட்டிக்குப்பின் இறந்தவரைக்குறித்து நிகழும் கிரியைகள் எல்லாம் பொதுவில் சிரார்த்தம் எனப்படும் சிரத்தையோடு செய்வது சிராத்தம் என்ற விளக்கத்தின் பேரில் அது அமையும் "சிரத்தை" என்பது கிரியை செய்பவர் இறந்தவர் மேற்கொள்ளும் பிரயாசை எல்லாவற்றையும் அடக்கும் நம்மவா சூழலில், ஆட்டைத்திதி, திவசம் இரண்டுந்தான் சிராத்தம் எனச் சிறப்பாகக் குறிக்கப்படுவதுண்டு. சும்மா ஐயருக்கு அரிசி கொடுப்பது என்ற பாவனை மட்டிலிருந்தால் அது சிராத்தமாகாது தெய்வ சிந்தனையும், தேவார வாக பாராயணமும், உபவாசமுமாயிருந்து உத்தமமான திரவி யங்களைத் தேடி பக்திபூர்வமாகச் செய்தாற்றான் அது சிராத்தமென்றே பெயர்க்குப் பொருத்தமாகும்.

## 24. துடக்கு காத்தல் என்ற ஒரு வழக்கம் இருக்கிறதே! அது என்ன அது எதற்காக?

துடக்கு என்பது ஒருவர் தொடர்பு காரணமாக ஒருவர்க்கேற்படும் அசுகுசுப்பான அகப்புறச் சூழ்நிலைகளைக் குறிக்கும். விஷேசமாகப் பிறப்பு, இறப்பு ருதுவாதல் காரணமாக நிகழும் அத்தகைய அகப்புறச் சூழ்நிலையை அது குறிப்பதுண்டு. அது தொடக்கு எனவும்படும். வடமொழியில் "தூய்மையின்மை" என்ற கருத்தில் ஆசௌசம் எனப்படும். குறித்த நிகழ்ச்சிகள் காரணமாகச் சம்பந்தப்பட்டவர்களின் உடம்பிலிருந்து வெளிவரும் துர்நாற்றஞ் சார்பான திரவியங்கள், கிருமிகள் முதலியன அகச் சூழ்நிலையை மட்டுமின்றிப் புறச் சூழ்நிலையையும் பாதிப்பதுண்டு. இறப்பு விஷயத்தில் பிரத்தியோகமாக மனத்தில், அதிர்ச்சி, அமைதியின்மை, கவலைகள் மிகுந்து அதனால் தனிப்பட்டவரும், அவர் தொடர்புள்ளாரும், அவர் சூழலும் துடக் காகும் நிலை ஏற்படும். ஒருவர் சம்பந்தப்பட்ட துடக்கு இரத்தத் தொடர்பு அடிப்படை யில் பலரைத்தாக்கும் என்பது அநுபவ உண்மை அவ்வகையான தொடக்குக்குட்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்புறச் சூழ்நிலைகள், சாந்தம், பொறுமை நேர்மை, திருப்தி முதலிய சத்துவ குணநிலைக்குப் பாதகமானவை பெரும்பாலும் சோம்பல், கவலை, மந்தம் முதலிய தாமசகுண விரத்திகளே அச்சூழ் நிலையில் இருக்கும். அதனால் சத்துவ குணவிருத்தி நிலையில் செய்யப்பட வேண்டிய, தெய்வ கைங்காரியங்கள், விரதங்கள், தானம் தவங்கள், கல்யாணம் போன்ற நன்மைக் காரியங்கள் ஆகியவற்றுக்கு அத்துடக்குக் காலம் விலக்காகும். புனித நிலையங்களிற் பிரவேசித்தற்கும் அது தடையாகும். இந்த ஒழுங்கை அநுசரித்தல் துடக்குக் காத்தல் எனப்படும் சைவப் பண்பாட்டின் பாரம்பரியமான ஒரு நடைமுறை விதி இதுவாகும்.

மேற்காட்டியவாறான அகப்புற அசுகுசுப்புச் சூழ்நிலைகள் மாறுவதற்குக் குறிப்பிடப்பட்ட ஒரு கால எல்லையுண்டு. அது இயற்கை நியதி. அவ்வெல்லையில் மந்திரக் கிரியை சம்பந்தமான ஒரு தூய்மை செய்தல் மூலம் அகப்புறச் சூழ்நிலையில் ஒரு திருப்தியும் பரிமளிப்பும் புது மலர்ச்சியும் ஏற்படுதல் சாத் தியமாகும். அந்நோக்கில்

நிகழும் மந்திரக் கிரியை துடக்குக் கழித்தல், ஆசௌச நீக்கம் எனப் பெயர் பெறும்

**நன்றி:-** **அபரக்கிரியை விளக்கம்**

**இலக்கியகலாநிதி பண்டிதமணி மு. கந்தையா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் திருமதி வள்ளியாச்சி கந்தசாமி அவர்களின் மறைவு குறித்த இரங்கற்பா

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| **1932.05.23** | **2015.01.05** |

# விண்ணவர் தம் விருந்தாகி வாழியவே!

கோலத் தமிழ் மாந்தர்
குடிகொண் டிலங்கு கின்ற
**ஆனைக் கோட்டை** என்னும்
அழகான ஊர் தனிலே
சீலமுடன் வாழ்ந்தி ருந்த
சீராளர் கந்த ருடன்
வாழவந்த தெய்வத் தாய்
**வள்ளியாச்சி** என்றறி வோம்!

அக்கம் பக்கத் தார்
அன்புக்குப் பாத்திர மாய்
எக்காலும் அன்னவர் தம்
எழிலான வாழ்வி யலின்
துக்கம் துயர் அனைத்தும்
துடைக்கின்ற தன்மை யுடன்
பக்கம் இருந்து செய்த
பணியாவும் நாம் மறவோம்!

பெருமையுடன் பலர் பேசும்
பீடுடைய இல்ல றத்தில்
வறுமையிலும் செம்மை யுடன்
வாழ்வாங்கு வாழ்ந்தி ருந்து
அருமை மழலை களாய்
ஆண்மக்கள் நால்வ ரையும்
பெருமையுடன் ஐவ ரையும்
பெண்ணாகப் பெற்றவள் நீ!

ஆனையூர்ப் பள்ளி தன்னில்
அதிபராய் "இராஜ சேகர்"
சாலவே வங்கி தன்னில்
"சௌந்தர ராசா" மற்றும்,
நல்லரும் நாட காங்கள்
நெறியாளும் "விஸ்வ கேது."
கல்வியைக் கற்பிக் கின்ற
கடமையில் "இரவிச் சந்தர்!"

மாண்புகள் தனையே சூடி
மண்ணிலே தலை நிமிர்ந்து
வாழ்ந்திடச் செய்த **அன்னை**
**வரிசையில் சிகரம்** தொட்டீர்!
கேண்மையின் இருப்பி டமாய்
கீர்த்தியோ டிருந்து; பூவில்
காண்பவர் வியக்கும் வண்ணம்
கருத்தினில் நிறைந்தீர் உண்மை!

**"கந்தர் – வள்ளி"** உனைக்
கைப்பிடித்த காலம் முதல்
அந்தம் வரைக்கும் நீ,
அன்பின் இக்கணை மாய்,
இந்நிலம் வாழ்ந்த தனை
இங்கெவர்தான் மறந்தி டுவார்?
வந்ததுவே அழைப் பிதழும்
வானத்தார் விருந் தானீர்!

இல்லறத்தில் மக்க ளெல்லாம்
இணைந்தே மகிழ்ந்தி ருக்க
பிள்ளைகளின் பிள்ளை களாம்
பேரர், பேர்த்தி யரை
வல்லவராய்க் கண்டு மனம்
வாடாமல் களித்தி ருந்து
தொல்லுலகை விட்டே தான்
தொடர்ந்தீரோ நெடும் பயணம்?

இடையில் வந்து விட்ட
இடமாற்றக் கட்டளை யால்
உடைய எமது மனம்
ஒன்றிக் கலங்கி விட,
விடைபெற்றுச் செல்லும் உமை
விழிநீரைப் பரிச ளித்தே
விடைதந்தோம்! "**விண்ணவர் தம்**
**விருந்தாகி வாழியவே**"!

தாமரைதாசன்

இங்ஙனம்
பிரிவுத்துயரில் பங்கேற்கும்,
ஆனைக்கோட்டை வாழ் மக்கள்,
05.01.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
**1932 - 05 - 23**



**மறைவு**
**2015 - 01 - 05**

**ஆலங்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட**

## அமரர். கந்தசாமி வள்ளியாச்சி

**அவர்கள் 05.01.2015 அன்று காலமானார்.**

அன்னார் அமரர் கந்தசாமியின் அன்பு மனைவியும், விசுவகேது, மல்லிகாதேவி, குமாரி, மேனகா,சௌந்தரராஜன்(இலங்கை வங்கி மட்டக்களப்பு),தேவிகா (ஆசிரியை, தி/திருக்கோணேஸ்வரா வித்), அமுதா, ரவிச்சந்திரன் (ஆசிரியர், தி/அல்-அக்ஷா (மு.ம.வித்), இராஜசேகர் (ஆசிரியர், தி/ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கண்டு மணி, இராமச்சந்திரன் ஜெயராஜரெட்ணம், வேலும் மயிலும், பரமேஸ்வரி (ஓய்வுநிலை ஆசிரியை), ஆறுமுகம் (இ.போ.ச ஓய்வு நிலை சாரதி பயிற்சியாசிரியர்) அமரர் சச்சிதானந்தம் (ஓய்வு நிலை அதிபர்), புஸ்பராணி (ஆசிரியை - இல் அதான். வித்), ஜெயபாரதி ஆகியோரின் மாமியாரும், கோணேஸ்வரன் (சவுதிஅரேபியா), நளினி (அமரர்), மதன் (அமரர்), மதனி(அமரர்), செந்தில், இராதை (ஆசிரியை, ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி), வைதீஸ்வரன் (சுவிஸ்). கங்கேஸ்வரன்(கனடா), பிரதீபா (சுவிஸ்), சிவகுமார்(அமரர்), சிவரதி, சிவதர்ஷினி, சிவதர்ஷிகா, லோஜினி (சர்வோதயம்), விஜயகாந், சதீஸ்காந் (தொழிநுட்ப உத்தியோகத்தர்), பிரியதர்ஷினி, பிரணவி (தாதிகள் பயிற்சிக் கல்லூரி, மட்டக்களப்பு), பிரதா, பிரவீனா (சுவீடன்), பிரசாந், பிரணியா (மருந்துவத்துறை, கண்டி பல்கலைக் கழகம்), கமலினி(M.O.H.Office, Trinco) சிவாஜினி, ரூபன், பிரசாந்தினி, கரிஸ்மன், நிஷோத்மன் அபிஷேத்மன், வருநித்தா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

**அன்னாரின் பூதவுடல் 06.01.2015 செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் நல்லடக்கத்துக்காக ஆலங்கேணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்**


இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

ஆலங்கேணி - 02
கிண்ணியா

தகவல்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனித்தம்பி + ராசம்மா

# வம்சா

கந்தசாமி
தில்லையம்மா
கிருஷ்ணபிள்ளை
ச்ரோஜா
தர்மலிங்கம்
வசந்தகோகிலா
சண்முகராஜா

விஸ்வகேது
+
கண்டுமணி

கோணேஸ்வரன்
நளினி
மதன்
மதனி

செந்தில்குமார் + சுஜிந்தா

மல்லிகாதேவி
+
இராமச்சந்திரன்

ராதை
வைதீஸ்வரன்
கங்கேஸ்வரன்
பிரதீபா

குமாரி
+
ஜெயராஜரெட்ணம்

சிவகுமார்
சிவரதி
சிவதர்சினி
சிவதர்சிகா

மேனகா
+
வேலும் மயிலும்

லோஜினி
விஜயகாந்
சதீஸ்காந்

லோஜினி +கங்காதரன்

சதீஸ்காந் + ஜனனி

திபிசாந்

கோணேஸ்வரன் +சாரதா

அனுதன்
சுஜிபன்
நிதுசன்

ராதை+புவனேஸ்வரன்

தவேஷ்கர்
விதுர்ஷா

வைதீஸ்வரன் +நந்தினி

சினேகா
தாருங்கா

கங்கேஸ்வரன் +சுபாஷினி

லிதுர்ஷன்
ரிஷிகேசன்

பிரதீபா +கருணாகரன்

தானியா

சிவதர்சினி +விஜிதரன்

அஞ்சனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழி

கணபதிப்பிள்ளை + தெய்வானைப்பிள்ளை

↓

கந்தசாமி
வடிவேல்
வள்ளியாச்சி
வைரமுத்து
முத்துப்பிள்ளை
மாணிக்கராசா
செல்வராசா
கனகாம்பிகை
மகாலிங்கம்

சௌந்தரராஜா + பரமேஸ்வரி
↓
பிரியதர்சினி
பிரணவி

தேவிகா + ஆறுமுகம்
↓
ஜெயப்பிரதா
ஜெயப்பிரவீனா
ஜெயப்பிரசாந்
ஜெயப்பிரணியா

அமுதா + சச்சிதானந்தம்
↓
கமலினி
சிவாஜினி
நவரெட்ணரூபன்
பிரசாந்தினி

ரவிச்சந்தர் + புஸ்பராணி
↓
ஹரிஸ்மன்

ராஜசேகர் + ஜெயபாரதி
↓
நிசோத்மன்
அபிசோத்மன்
வர்ணித்தா

ஜெயப்பிரதா + ஹரிதரன்
↓
ஹரிஸ்வர்
நிதுஸ்கா

ஜெயப்பிரவீனா + செல்வன்
↓
செபிஸ்ணன்
செஜினா
செனுஜா

கமலினி + ஜெயபால்
↓
திவாகரி

சிவாஜினி + மோகனகுமார்
↓
பவலக்ஷனா
பவசஞ்சை
பவரிக்ஷிகா

நவரத்தினரூபன் + சிந்துஜா
↓
யுதிகேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிப் பூக்கள்

எங்கள் அன்புத் தெய்வம் அமரர் கந்தசாமி வள்ளியாச்சி அவர்களின் இறுதிச் சடங்குகள், எட்டாம் நாள் நிகழ்வுகள் அந்தியேட்டி கிரியைகள் நிகழ்வுகள் அனைத்திலும் கலந்து கொண்டு பங்கெடுத்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், ஆலங்கேணி மரண சங்கத்தினருக்கும் தொலைபேசியூடாக எமது துயரில் பங்குகொண்ட உள்ளூர், வெளியூர் உறவுகளுக்கும் கண்ணீரஞ்சலிகள் மலர்மாலைகள் மலர் வளையங்கள், பதாதைகள் மூலம் தம் துயரை எம் மோடு பகிர்ந்து கொண்ட நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-குடும்பத்தினர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை நீ இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்? அதை நீ இழப்பதற்கு
எதை நீ படைத்திருக்கிறாய் அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக்கொண்டாயோ அது இங்கேயே எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.

இந்த மாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

New sky printers
Veppankulam,
Vavuniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org